# 2 ஏடுகளின் வகை

செங்கற்பட்டு ஆவணங்கள் நில அளவு, விளை பொருட்கள், நில வருவாய் போன்ற பல்வேறு செய்திகளை வகை வகையாகத் தருகின்றன. நில வருவாய் கணக்கிடும் பொருட்டு எழுதப்பட்ட இந்த ஆவணங்கள் தரப்படி வகைஏடு, தொகை ஏடு, தீர்வை வகை ஏடு, வாரச்சட்டம், சுதந்திரத் திட்டம், மேரைச் சட்டம், பேரிசு தொகை ஏடு, வீட்டு வயணம், ஏரியளவு, தும்பால் மானிய வயணம் என, பல்வேறு வகை தலைப்புகளின்கீழ்க் காணப்படுகின்றன. இவற்றின் வாயிலாக ஒவ்வொரு கிராமத்தின் அமைப்பு, நிலப்பயன்பாடு, கிராம சமுதாயம், அவர்கட்கு வழங்கப்பட்டுவந்த பலதரப்பட்ட மானியங்கள் மற்றும் சிறப்பு உரிமைகள், சாகுபடி, மகசூல், தானியங்கள் பங்கீட்டு விவரம், தீர்வை போன்ற பல்வேறுவித சமூகப் பொருளியல் செய்திகளை அறியமுடிகிறது. ஒவ்வொரு வகை செய்திக்கும் ஏட்டிலேயே தலைப்பிட்டுச் சுட்டும் முறை இந்த ஆவணங்களின் சிறப்பான அமைப்பாகும்.

இவற்றுள் எந்தெந்த வகை ஏடுகள் எந்தெந்தவிதமான செய்திகளைத் தருகின்றன என்பது பற்றி இங்குத் தனித்தனியே முறைப்படி காண்போம்.

## தரப்படி வகை ஏடு

தரப்படி வகை ஏடுகள் என்பன கிராம நிலங்களின் தரவாரிப் பிரிப்பைக் காட்டுவன எனலாம். அதாவது வருவாய் கணக்கிடுவதற்காக, நிலப்பண்பு மற்றும் தரத்திற்கு ஏற்ப கிராம நிலங்கள் பிரிக்கப்பட்டு அவற்றுள் அமைந்திருக்கும் பகுதிகள் பற்றிக் கூறுவதால் இவை தரப்படி வகை ஏடுகள் என அழைக்கப்பட்டிருத்தல் கூடும்.

ஒவ்வொரு கிராமமும் மிகத் துல்லியமாக அளக்கப்பட்டு அதன் முழு அமைப்பையும் ஒரு வரைபடம்போல் நம் கண் முன்னே காட்டுவன போல் முழுமையான தெளிவான தகவல்களைத் தருவது இந்த வகை ஏடுகளின் சிறப்பாகும்.

ஒவ்வொரு கிராமத்தைப் பற்றிய கணக்குகளும் தரப்படி வகை ஏட்டுடன் தொடங்குகின்றன. பிள்ளையார் சுழி, ஸ்ரீ ராமஜெயம், சிவமயம் போன்றவற்றுடன் தொடங்கும் ஒவ்வொரு ஏடும் ஊரின் பெயர், அது அமைந்திருக்கும் சீமை

*மாகாணம் ஆகியவற்றின் பெயர், ஆங்கிலம் மற்றும் தமிழ் வருடம், தேதி ஆகியவற்றுடன் அந்தக் கணக்கு எதற்காக யாருடைய திட்டப்படிக்காக எழுதப்பட்டது, அது எந்த வகையேடு, ஏட்டின் எண் போன்ற தெளிவான தகவல்களை முகப்பிலேயே கொண்டு விளங்குகின்றன.*

*அதைத் தொடர்ந்து கிராமத்தின் மொத்த நிலப்பரப்பும் 24 அடிக்கோலால் அளக்கப்பட்டு நஞ்சை தரம் எவ்வளவு? புஞ்சை தரம் எவ்வளவு? போன்ற விவரங்களுடன்,*

1. *புறம்போக்கு நிலங்கள்*
2. *மானிய நிலங்கள்*
3. *வாரப்பற்று நிலங்கள்*

*எனப் பிரிக்கப்பட்டிருந்ததைத் தெளிவாக விளக்குகின்றன. இப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் அடங்கும் பகுதிகள். அவற்றின் பயன்பாடு பற்றிய தெளிவான விளக்கங்களுடன் இவை காணப்படுதல் குறிக்கத்தக்கதாகும். இவற்றை அட்டவணை 1-அ-ல் காணலாம்.*

*ஆக, தரப்படி வகை ஏடு என்பது நிலங்களின் தன்மைக்கும் பயன்பாட்டிற்கும் ஏற்ப தரம் பண்ணி பிரிக்கப்பட்ட நிலப்பிரிவுகள் பற்றிய விரிவான செய்திகளைத் தரும் ஏடுகள் எனலாம். இத் தரப்படி வகையேடு முதற்கண் புறம்போக்கு நிலங்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன.*

*புறம்போக்கு நிலங்களான ஊருக்கு நடுவே அமைந்திருக்கும் கோயில்களில் தொடங்கி குளம், குட்டை, தாங்கல், ஏரி, மலை, மடு, களத்துமேடு, மந்தவெளி, கிராமநத்தம் (குடியிருப்புப் பகுதி) சேரிநத்தம், ருத்திரபூமி எனும் வரிசையில் ஒவ்வொரு பகுதியும் அவ்வவற்றின் பெயர், அமைவிடம் (திசை விளக்கங்களுடன்) பரப்பளவு ஆகியவற்றுடன் புறம்போக்கு எனும் தலைப்பின்கீழ் பேசப்படுகின்றன.*

*நத்தம் என்பது குடியிருப்புப் பகுதியைக் குறிப்பதாகும். ஒவ்வொரு கிராமத்திலும் குடியிருப்புப் பகுதி கிராம நத்தம், சேரி நத்தம் என இரு பிரிவுகளாகக் காணப்படுகின்றன. நத்தத்தில் காணப்படும் ஒவ்வொரு வீடும் அதன் சொந்தக்காரரின் பெயர் மற்றும் தொழில் விவரங்களுடன் பதிவாகியுள்ளது. ஒவ்வொரு ஊரிலும் காணியாட்சி பெற்றிருந்தவர்களின் வீடுகளில் தொடங்கி பிராமணர், வெள்ளாளர், கணக்குப் பிள்ளைகள், பள்ளிகள், இடையர், செட்டிகள், கம்மாளர், சாணார், வண்ணான், நாவிதன் எனும் வரிசையில் ஒவ்வொரு வீடும் புழக்கடை உட்பட அதன் பரப்பளவுடன் குறிப்பிடப் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. வீடுகளின் அமைப்பு, அளவு, கணக்குக் குறிப்புகளில் அவை வரிசைப்படுத்தப்பட்டிருக்கும் விதம் இவற்றின் வாயிலாக கிராம மக்களின் பல்வேறு வகை சாதி, அவர்தம் தொழில்கள், அவர்கள் பெற்றுவந்த சிறப்புரிமைகள் சமூக, பொருளாதார நிலை போன்றவற்றை அறியமுடிகிறது.*

புறம்போக்கு நிலங்கள் பற்றிய குறிப்புகளைத் தொடந்து கிராம விளை நிலங்கள் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. அவை தும்பால் மானிய நிலங்கள், வாரப்பற்று நிலங்கள் எனும் இரு பிரிவுகளில் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

கிராம மிராசுதாரர்களுக்கென விளை நிலங்களின் ஒரு குறிப்பிட்ட பகுதி மானியங்களாக அளிக்கப்பட்டிருந்ததை இவ்வேடுகள் தெரிவிக்கின்றன.

மானியங்கள் தரப்படி மானியம், தும்பால் மானியம், அன்னியர் அனுபோகம், மேல்வாரப்பாதி மானியம், சன்னது மானியம், சர்வமானியம், அர்த்த மானியம் போன்ற பல்வேரு வகைகளில் அளிக்கப்பட்டிருந்ததை இவை காட்டுகின்றன. இவற்றின் வாயிலாக கிராம மிராசுதாரர்கள் எனக் குறிப்பிடப் பெறுபவர் யார்? அவர்கள் பெற்று வந்த மானியங்கள் என்னென்ன? எதற்காக அவை அளிக்கப்பட்டன போன்றவற்றைப் பற்றிய ஆய்விற்கு இவை பெரிதும் உதவும்.

மானிய நிலங்களை அடுத்து வரி விதிப்பிற்குட்பட்ட அரசு நிலங்கள் பற்றிய குறிப்புகள் வாரப்பற்று நிலங்கள் எனும் தலைப்பின்கீழ் விளக்கப்படுகின்றன. இவை செய்கால், கரம்பு என பிரிக்கப்பட்டிருந்ததை இவ்வேடுகள் காட்டுகின்றன. இவை அமைந்துள்ள இடம், திசை விளக்கத்துடனும், நிலத்தின் அளவு, தரம், அது எவ்வகைப் பாசனத்தைப் பெற்று வருகிறது போன்ற விவரங்களுடன் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பது சிறப்புடையதாகும்.

எ.கா.

ஊருக்கு கிழக்கு மணஞ்சேரி தாக்கு காணி 10

ஊருக்கு வடகிழக்கு நூக்கம்வெளி காணி 10

ஊருக்கு தென்கிழக்கு பங்குனிமேடு காணி

- (திருப்போரூர் ஏடு – 19)

மேட்டுக்கால் பாய்ச்சல் ஊருக்கு மேல்புரம்

செங்க சூளை வகையரா

- (கல்குளம் ஏடு – 8)

இவ்வாறு வாரப்பற்று நிலங்களைப் பற்றிய குறிப்புகளுடன் தரப்படி வகை ஏடுகள் முடிவடைகின்றன.

## தரப்படி தொகை ஏடு

தரப்படி வகை ஏட்டின் சுருக்கமே (Abstract) தரப்படி தொகை ஏடு ஆகும். தொகுப்பது தொகையன்றோ. தரப்படி வகை ஏட்டில் காணப்படும் செய்திகள் அனைத்தும் தொகுத்துக் கூறப்படுவதால் இவை தரப்படித் தொகை ஏடுகள் எனப்படுகின்றன.

### வகை ஏடுகள்

பொதுவாக நிலங்களின் தரவாரிப் பிரிவுகளைப் பற்றிய குறிப்புகளுடன் தரப்படி வகை ஏடுகள் முடிவடைந்து விடுகின்றன. இவற்றுடன், கூடுதலாக 5 வருடங்களுக்கான தீர்வைக் கணக்கு பற்றிய விவரங்களைத் தரும் ஏடுகள் வகை ஏடுகள் எனப்படுகின்றன. இவை மொத்த விளைச்சலிலிருந்து வருவாய் கணக்கிடும் முறையைப் பற்றிக் கூறுவன.

காட்டாக, திருக்கச்சூர், சிங்கபெருமாள் கோவில் ஆகிய கிராமங்களின் வகை ஏடுகளை எடுத்துக் கொள்வோமாயின் அவை நிலங்களின் தரவாரிப் பிரிவுகள் பற்றி முதலில் விரிவாகக் கூறி, பின் 1762 முதல் 1766 வரையிலான தீர்வை பற்றிய கணக்குகளைத் தருகின்றன. இவற்றில் முதலில் ஒவ்வொரு வருடத்தின் மொத்த மகசூல் கொடுக்கப்படுகிறது. பிறகு அதிலிருந்து தும்பால் மானியம் கழிக்கப்பட்டு பிறகு மீதமுள்ள தானியத்திலிருந்து அரசுக்குச் சேரவேண்டிய தீர்வை கணக்கிடப் பெறுகிறது. இவற்றோடு அரசுக்கு ரொக்கமாகக் கிடைக்கின்ற தீர்வை யார் யாரிடமிருந்து எவ்வளவு பெறப்படுகிறது என்பது கணக்கிடப்பட்டு மொத்த தீர்வை கணக்கிடப்பெறுகிறது.

வருவாய் பற்றிய செய்திகளை மிகத் தெளிவாகக் காட்டும் இவ் வகை ஏடுகள் பொருளாதார ஆய்வுகட்கு மிகுந்த அளவில் துணைபுரிவன.

### பேரிசு தொகை ஏடு

பேரிசு (beriz) என்பது வருவாய் என்பதைக் குறிக்க பயன்படும் பாரசீகச் சொல் ஆகும். 5 வருடங்களுக்கான கணக்கிடப்பட்ட வருவாயைப்பற்றி இந்த ஏடுகள் கூறுகின்றன. அரசுக்கு தானியமாக கிடைக்கப்பெற்ற வருவாய் (Revenue in kind) முதலில் குறிப்பிடப்பெற்று அவற்றின் விலை மதிப்பு (விக்கிரையம்) கணக்கிடப்பெற்று பின்பு அவற்றுடன் ரொக்கமாக கிடைத்திரும் வருவாயும் (ரொக்காதாயம் – Revenue in Cash) சேர்க்கப்பட்டு மொத்த வருவாய் கணக்கிடுவதை இந்த ஏடுகள் வாயிலாக அறியலாம். சான்றாக, இயல் – 3ல் இடம்பெற்றுள்ள வருவாய் பற்றிய செய்திகளை விளக்கும் அட்டவணைகளில் இவற்றைக் காணலாம்.

### வீட்டு வயணம்

ஒவ்வொரு கிராமத்தில் அமைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கையை இவ்வகை ஏடுகள் குறிப்பிடுகின்றன. பிராமணர் வீடு 5, துளுவ வெள்ளாளர் வீடு 5 என்றவாறு ஒவ்வொரு கிராமத்தில் எந்தெந்த சாதியினர் வீடு எத்தனை இருந்தன என்பதைக் காட்டும்விதமாக இவை அமைந்துள்ளன. ஒரு கிராமத்தில் உள்ள மொத்த வீடுகள், சாதியாளர், பற்றி அறிய இவை உதவும். காட்டாக சிங்கப்பெருமாள்கோவில் கிராம ஆவணத்தின் வீட்டுவயணம் ஏடுகளைக் காணலாம்.

உ ஸ்ரீ ராம செயம் சிங்கப்பெருமாள் கோயில் வீட்டு வயணம் கிறாமத்தம் 1 க்கு வீடு 87க்கு காணியாசி விஷ்ணு பிறாமணர் வீடு 1 காணியாட்சி நல வெள்ளாழர்

*வீடு 3 கிறையம் காணியாட்சி கணக்கபிள்ளை வீடு 1 சுகவாசி விஷ்ணு பிறாமணர் வீடு 20 சாத்தானியன் வீடு 2 சைவ பண்டாரம் வீடு 1 துளுவ வெள்ளாழர் வீடு 1 நல வெள்ளாழர் வீடு 7 சீர்கண்க்கபிள்ளை வீடு 7 சீர்கணக்கபிள்ளை வீடு 2 எடையன் வீடு 1 கைக்குளர் விடு 12 சேனியன் வீடு 7 தாசிகள் வீடு 4 பள்ளிகள் வீடு 12 நாகசரக்காறன் வீடு 1 செட்டி வீடு 1 செட்டி வீடு 3 கோமுட்டி வீடு 1 தட்டான் வீடு 3 தச்சன் வீடு 2 கருமான் வீடு 1 வாணியன் வீடு 1 வண்ணான் வீடு 1 பஞ்சுகொட்டி துலுக்கான் வீடு 1 ஆக வீடு 87 (செங்கற்பட்டு ஆவணங்கள், சிங்கப்பெருமாள் கோவில் ஏடு).*

## வாரச்சட்டம்

மொத்த விளைச்சலும் (உடன் வாரம் i.e. Gross Produce) மேல் வார தாரர் குடிவாரதாரர் ஆகியோருக்கிடையே ஒரு குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் பிரித்துக் கொள்ளப்படும் விதத்தினைப் பற்றிக் கூறும் ஏடுகள் வாரச் சட்ட ஏடுகளாகும். இவை மேலும் குடிவாரம் மேல் வாரம் ஆகியவற்றிலிருந்து பொதுச்செலவு, மேல்வார மேரைச்செலவு எனும் பெயரில் செய்யப்பெறும் ஒதுக்கீடுகள் பற்றியும் கூறுவன.

நிலத்தின் தரம், பாசன வசதி, காணியாட்சிக்காரர், சுகவாசிகள், கோவில் கம்பத்தம் போன்றவற்றிற்கேற்ப மகசூல் 45%, 50%, 60% போன்ற பல்வேறு விகிதாச்சாரத்தில் மேல்வாரம் குடிவாரமாகப் பிரிக்கப்பட்டிருந்ததை இவ் வாரச்சட்டம் ஏடுகள் தெரிவிக்கின்றன.

எ.கா.

*உ ஸ்ரீராமசெயம் சிங்கபெருமாள்கோவில் வாரச்சட்டம் வாரம் 2*

*காணியாட்சி விஷ்ணு பிறாமணருக்கும் நலவெள்ளாழருக்கும் நஞ்சை செங்குன்றம் ஏரி பாச்சலுக்கு வருஷத்துக்கும் 100 கலத்துக்கு 50 கலம் ஆக குடிவாரம் 41 கலம் 8 மரக்கால் மேல்வாரம் 35 கலம், 5 மரக்கால் பொது சிலவு 16 கலம் 8 மரக்கால் மேல்வாரம் சிலவு 6 கலம் 3 மரக்கால் ஆக 100 கலம் சூட்டுச் சிலவு 10 கலம் கள சிலவு 11 கலம் 9 மரக்கால் 2 படி காணியாட்சி பிறாமணர் நல்ல வெள்ளாழர் புஞ்சை கொல்லைக்கும் கிராம கிறையம் வெங்கிட்டநறசுபிள்ளை நஞ்சை புஞ்சை சகலத்துக்கும் 100 கலத்துக்கு 60 கலம் ஆக குடிவாரம் 50 கலம் மேல்வாரம் 27 கலம் 1 மரக்கால் பொது சிலவு 16 கலம் 8 மரக்கால் மேல் வாரம் சிலவு 6 கலம் 3 மரக்கால் ஆக 100 கலம்.*

*பொது சிலவுக்கு வயணம் காஞ்சிபுரம் கோவில் 11 மரக்கால் 5 படி படியாள் 6 கலம் 11 மரக்கால் 6 படி சிங்கப்பெருமாள் கோவில் 11 மரக்கால் 5படி கானுக்கோயி 9 மரக்கால் 5படி தேசமுகி 1 கலம் 11 மரக்கால் சராப்பு 5 மரக்கால் 6 படி திவாணத்தை சேருகிறது ஏரிமேரை வகையறா 4 கலம் 4 மரக்கால் 3 படி ஆக 16 கலம் 8 மரக்கால் மேல்வாரம் சிலவுக்கு வயணம் காவல் 2 கலம் 1 மரக்கால் கணக்கு 2 கலம் 1 மரக்கால் தச்சன் கருமான் வகையறா 2 கலம் 1 மரக்கால் ஆக 6 கலம் 3 மரக்கால்.*

## சுதந்திரத் திட்டம்

விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட உரிமையைப் பெறும் திட்டமே சுதந்திரத் திட்டம். மொத்த மகசூலும் மேல்வாரம் குடிவாரமாகப் பிரிக்கப்படுவதற்கு முன்பாக **1.** கதிருடனும் **2.** களம் அளப்பதற்கு முன்பாக தானியமாகவும் ஆக இரு நிலைகளில், கிராம மிராசுக்காரர் மற்றும் நிர்வாகப் பணிகளில் தொடர்புடையோருக்கு வழங்கப்பட்டு வந்த பங்கினைப் பற்றிக் கூறுவன சுதந்திரத் திட்டமாகும். சூடு திட்டம், கையேற்புத் திட்டம், தலை மடக்கு, குப்பத்தம், குப்பம், போர் போன்ற பலவித பெயர்களில் அவை வழங்கப்பட்டு வந்ததை இவ்வேடுகள் தெரிவிக்கின்றன.

## ஏரி அளவு

ஏரிகள் செப்பனிடப்படுவதற்கு ஆகக்கூடிய செலவுகள் மற்றும் அவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய வருவாய் போன்றவற்றைப் பற்றிய விவரங்களை இந்த ஏடுகள் கூறுகின்றன. பெரும்பான்மையும் ஒவ்வொரு கிராமக்கணக்கும் ஏரி அளவு பற்றிய ஏடுகளுடன் முடிவடைகின்றன. அவற்றின் கடைசியில் ஒவ்வொரு ஊரில் இருக்கக்கூடிய கால்நடைகள் பற்றிய விவரங்கள், அந்த ஊரின் பாளையக்காரர் காணியாட்சிக்காரர் ஆகியோர் பற்றிய விவரங்கள் இடம்பெறுவதையும் காணமுடிகிறது.

## தும்பால் மானிய வயணம்

ஒவ்வொரு ஊரிலும் கிராம மிராசு, கோயில் நிர்வாகத்தினர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட மானியங்கள் பற்றிய விவரங்களைத் தனியாகக் கூறும் ஏடுகள் தும்பால் மானிய வயண ஏடுகள் ஆகும். இவை தரப்படி வகை ஏடுகளில் பொதுவாக கூறப்பட்டாலும், சில கிராம ஆவணங்களில் இவற்றைத் தனியாகவும் தும்பால் மானிய வயணம் எனும் தலைப்பின் கீழ்க் காணமுடிகிறது (எ.கா. உள்ளாவூர் கிராம ஆவணம்).